[28th August 1961

THE HON. SRI M. A. MANICKAVELU : In the interests and exigencies of service, in order to carry out the work that has been taken up and also in order to maintain continuity, it is necessary to re-employ him a second time. The hon. Member may probably be aware of the fact that we have got a very good certificate from the Union Government to the effect that in the Malaria Eradication Scheme, the work carried out by the Madras State was the best in the whole country.

Drinking Water-supply (Tiruvannamalai)

* 1437 *Q.*—**SRI S. M. ANNAMALAI (on behalf of SRI P. S. SANTHANAM AND SRI P. U. SHANMUGAM) :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சாத்தனூர் நீர்த் தேக்கத்தில் இருந்து திருவண்ணாமலைக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The proposal to tap water-supply from Sathanur Canal is being investigated, as one of the alternative sources for providing water-supply to Tiruvannamalai Municipality and the field work is nearing completion.

SRI S. M. ANNAMALAI : இதற்கு எவ்வளவு பணம் செலவாகும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு 6 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் முடிந்த பிறகுதான் எவ்வளவு செலவு என்பது தெரியும்.

Allegation of Misbehaviour

* 1438 *Q.*—**SRI M. P. SARATHI :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட கருவூலத்தில் நடந்த பணக் கையாடல் பற்றி விசாரணையின்போது கருவூல அதிகாரி, தலைமைக் கணக்கர் ஆகியோர் ஒரு பெண் கணக்கரிடம் இழிவாகப் பேசிய தாகவோ நடந்ததாகவோ புகார் வந்ததா ?

(இ) அப்படியானால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) No, Sir.

(இ) Does not arise.

M.B.B.S. Examination

* 1440 *Q.*—**SRI N. R. THIAGARAJAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1958-59, 1959-60 ஆண்டுகளில் இறுதி வைத்திய கல்வி பரீக்ஷையில் தேறிய மாணவர்கள் எத்தனை பேர் ?

(இ) பரீக்ஷைக்குச் சென்றவர் எத்தனை பேர் ?

28th August 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) The number of students who passed in the final M.B.B.S. Examination was 321 during 1958–59, and 364 during 1959–60.

(இ) The number of students who appeared for the M.B.B.S Examination was 631 during 1958–59 and 643 during 1959–60.

SRI A. A. RASHEED : Is it a fact that the high percentage of failure is due to the lack of experienced and efficient teaching staff?

THE HON. SRI M. A. MANICKAVELU : On the other hand, the passes are better now. Hon. Members may be aware that the passes in the Medical Examination used to be very poor. Now, the percentage of passes is more than 50.

SRI M. KALYANASUNDARAM : *கனம் அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமென்றால் இது திருப்தி அளிக்கும். 1958-59-ல் தேறியவர்கள் 321. 1959-60-ல் தேறியவர்கள் 364. இவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் பரீட்சை கடினமானது என்பதைச் சிந்திக்கவேண்டும். எந்தெந்த காலேஜில் 60 சதம் தேறியிருக்கிறார்கள் ?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *கனம் அங்கத்தினர் இந்தப் பரீட்சை கடினமானது, எல்லோரும் பாஸ் பண்ணவேண்டுமென்று சொன்னால், பாஸ் பண்ண பின்னால் என்ன நிலைமை ஏற்படும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். சென்னை மெடிகல் காலேஜில் 1959-60-ல் தேறியவர்கள் 223-க்கு 136. ஸ்டான்லி மெடிகல் காலேஜில் தேறியவர்கள் 244-க்கு 132. மதுரை மெடிகல் காலேஜில் தேறியவர்கள் 81-க்கு 48. வேலூர் கிரிஸ்டியன் மெடிகல் காலேஜில் 84-க்கு 48 பேர்கள் தேறினார்கள்.*

SRI M. KALYANASUNDARAM : *இந்த மாதிரி நமது மாநிலத்தில் இறுதிப் பரீட்சையில் தேறியவர்கள் மிகக் குறைவாக இருப்பதை உத்தேசித்து அதிகமான ப்ரொபசர்களை நியமிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு யோசனை ஏதாகிலும் வந்ததா ? அப்படியிருந்தால் அந்த யோசனைமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *யோசனை ஒன்றும் வரவில்லை.*

SRI R. SRINIVASA IYER : *உபாத்தியாயர்களுடைய சக்தியைக் குறைவாகப் பேசி, உபாத்தியாயர்களை ஜாஸ்தியாகப் பண்ணுவதற்குப் பதிலாக குழந்தைகள் நன்றாகப் படிப்பதற்கு, அதாவது வீக்காக இருப்பவர்களுக்கு தனியாக கோச்சிங் கொடுப்பதற்கு வழிவகை செய்வார்களா ?*

THE HON. SRI M. A. MANICKAVELU : *இது சாதாரண தத்துவம். திரு. கல்யாணசுந்திரம் சொன்ன தத்துவம் அலாதியானது.*

[28th August 1961

SRI M. KALYANASUNDARAM : மேலும் வேண்டுமானால் மாணவர்களுடைய பர்சன்டேஜை உயர்த்துவார்களா ?

(பதில் இல்லை.)

SRI T. S. RAMASWAMI : May I know whether there is any proposal for giving any special coaching to the Scheduled Caste students?

THE HON. SRI M. A. MANICKAVELU : Not that I am aware of.

Third Five-Year Plan

* 1441 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நம் மாநிலத்திற்கு முடிவாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The final provision allotted for the Third Five-Year Plan of this State is Rs. 290·89 crores.

SRI S. M. ANNAMALAI : முன்பு 10,200 கோடிக்கு திட்டம் போடப்பட்டபோது ஒதுக்கிய பணம், அதை 12,000 கோடிக்கு மேல் மாற்றியிருக்கும்போது இந்தத் தொகை உயர்த்தப்பட்டிருக்கிறதா ? அப்படி நமக்குள்ள தொகையை உயர்த்த நமது மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 12,000 கோடி, 10,000 கோடி என்றெல்லாம் சொல்வது, பப்ளிக் செக்டர், ப்ரைவேட் செக்டர் எல்லாவற்றையும் சேர்த்து சென்ட்ரல் கவர்ன்மெண்ட், ஸ்டேட் கவர்ன்மெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்திருக்கக்கூடியது. ஸ்டேட் கவர்ன்மெண்டுக்கு கொடுப்பதை எடுத்துக்கொண்டால் 291 கோடி போதுமானது என்றுதான் கருதவேண்டும்.

SRI M. KALYANASUNDARAM : தொகையை இன்னும் அதிகரிக்க வேண்டுமென்பது ஒருபுறமிருக்கட்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் அறிக்கை இறுதியாக முடிவு செய்யப்பட்டு பார்லிமென்ட்டில் அங்கீகரிக்கப்பட்ட பிறகு நமது ராஜ்யம் சம்பந்தப்பட்ட மட்டில் அந்த இறுதி அறிக்கையை நமது சபை முன் வைத்து அதன் மீது விவாதம் நடத்த சில தினங்கள், ஒதுக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கவனிக்க வேண்டிய விஷயம். நமது ராஜ்யத்தை பொறுத்தமட்டில் திட்டம் அச்சடித்து தயாராகிக் கொண்டிருக்கிறது, இரண்டு மூன்று நாட்களில் தயாராகிவிடும். அங்கத்தினர்கள் அதுபற்றி ஒரு விவாதம் வைக்க வேண்டுமென்று விரும்பினால் விவாதம் வைத்துக்கொள்வதில் ஆட்சேபனை இருக்க முடியாது.